முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் மார்கழி மாதம் 22 திகதி முதல்

சோபகிருது வருடம் மார்கழி மாதம் 29 திகதி வரை

(07.01.2024 ஞாயிறு முதல் 14.01.2024 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. வினைதீர்க்கும் வெற்றிவேலா
   வேல்முருகா ஞானபண்டிதா
   துணைவந்து இந்தியா தமிழகத்தில்
   தெய்வ ஞானஆட்சிதா என வேண்டி
2. வேண்டியே அகத்திய மகரிஷியும்
   வேலவன் அவதார அரங்கன் கேட்க
   உண்டான இந்தியா தமிழகம் தன்னில்
   உயர்வான சோபகிருது சிலைதிங்கள்
3. திங்களிலே இருபானீர் திகதிமேல் இருபான்நவ திகதிவரை
   தேசமதில் நடக்கும் வார நிகழ்வாக
   இங்கனமே வருங்கால பலன் குறித்த
   இயம்பிடுவேன் வார ஆசிதன்னை
4. ஆசியதும் கலிதானும் விலகி
   அற்புதமான வேலவன் தலைமை
   ஆசிகொண்ட ஞானஆட்சி காலம்
   அமைய உண்டான நிலைஇருக்க
5. இருக்கவே இன்னும் தன்நிலை
   ஏமாற்றும் வஞ்சிக்கும் தன்மை
   வருத்தமுற மாறாமல் ஆளுமை
   வல்லமைதரும் துறை அதிகாரிகள் என

6. எனஅனைவரும் தீவினை வழி
எங்களுக்கே எல்லாமென பதுக்கல்
ஞானமிலா தொடரக் கண்டால்
நம்பிக்கை மக்கள் சபையில் இழந்து
7. இழந்து வாட நேருமப்பா
எங்கும் ஞான விழிப்புணர்வு
களங்கமற தருமபலமாக மாற்றி
கந்தவேலன் மக்களை தேற்ற இருக்க
8. இருக்கவே இனியும் பகட்டான
ஏமாற்றும் அரசியல் களமாற்றிடா
கருத்திலா தொடர்ந்தால் அப்பனே
கந்தனே முடிவுதரும் வண்ணம்
9. வண்ணமுடன் இந்தியா தமிழகத்தில்
வருங்கால முடிவுகள் மாறி
அண்ணல் அரங்கன் தேடுகின்ற
ஆன்மீக ஞானப் படைகளென
10.படைகளென சேவை வழி வந்து
பாதுகாப்பான ஞான ஆட்சி
தடையற தேசமதில் நிறுவியே
தருமவழி தரணி வியக்க நடத்த நேரும்
11. நேருமை நீதி காக்கும் வழிமுறை
நிலமதனில் ஏற்கவே நடைமுறையில்
பேரிடர் அழிவு பிரளயமும் கடந்து போகும்
பிரச்சனைகளில்லா சூழலாக மாறும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் மார்கழி மாதம் 22ம் நாள் 07.01.2024 ஞாயிற்றுக்கிழமை முதல் மார்கழி மாதம் 29ம் நாள் 14.01.2024 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

வினைகளை தீர்த்து மக்களை காக்கும் வேலவனே வேல்முருகனே ஞானத்தின் தலைவனே ஞானபண்டிதனே இந்தியா தமிழகத்திலே தெய்வஞான ஆட்சி உருவாகிட துணை வருவாய் எங்கள் தலைவனே என முருகா உமது திருவடி வேண்டியே அகத்திய மகரிஷி யானும் இந்தியா தமிழகத்தினிலே சோபகிருது வருடம் மார்கழி மாதம் 22ம் நாள் 07.01.2024 ஞாயிற்றுக்கிழமை முதல் மார்கழி மாதம் 29ம் நாள் 14.01.2024 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்திலே நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

உலக மக்களே கலியுகத்தின் பலம் குன்றி கலி விலகி அற்புதமாய் ஞானத்தலைவன் முருகப்பெருமானின் தலைமையிலே முருகப்பெருமானின் ஆசி பெற்ற ஞானவான்களால் ஞானஆட்சியதும் உருவாகிடும் அற்புதமான சூழல் இருக்கின்றதப்பா. ஆதலினாலே இதுவரை எப்படி இருந்தாலும் சரி இனிமேல் ஆயினும் அவரவர் தம்மை உணருங்கள். பிறரை ஏமாற்றும் நிலையை கைவிடுங்கள் வஞ்சிக்கும் செயலை விட்டு விடுங்கள் ஆட்சி புரிவோரும் அதிகாரிகளும் தீய வழியினிலே சென்று எங்களுக்கு அனைத்தும் என தன்னலமாய் செயல்பட்டு பதுக்கல் செயலை தொடர்ந்து செய்யாதீர்கள்.

இருப்பினும் திருந்தாமல் மேன்மேலும் தர்மத்திற்கு புறம்பாக நடந்து கொண்டால் மக்களின் முன்னால் மக்களின் நம்பிக்கையை இழந்து வாட நேர்ந்திடும்.

நாடெங்கும் இனிவரும் காலம் முருகப்பெருமான் மக்களிடையே அறிவினில் தெளிவு உண்டாக்கி மக்களுக்கு ஞானம் உண்டாக்கி மக்களுக்கு விழிப்புணர்வு உண்டாக்கி தருமம் வளர்த்து தருமபலம் பெருக்கி மக்களை தேற்ற இருக்கின்ற படியினாலே இனியும் மக்களை ஏமாற்ற முடியாது மக்களிடையே பகட்டான ஏமாற்றும் அரசியல் செல்லுபடி ஆகாதப்பா. இனியும் மக்களை ஏமாற்றும் விதமாக அரசியல்வாதிகள் தொடர்ந்து செயல்பட்டால் மக்கள் அவற்றை உணர்ந்து வருங்காலத்தில் முடிவுகளை மக்களே மாற்றி அமைத்திடுவார்கள் அண்ணல் ஆறுமுக அரங்க மகான் விரும்புகின்றது போல புதியவர்களான தர்மவான்கள், ஞானவான்கள் எல்லாம் களம் இறங்கி

ஞானப்படைகளாக செயல்பட்டு சேவைகள் மூலம் நாட்டினில் பாதுகாப்பு மிக்க ஞானஆட்சியை முருகப்பெருமான் தலைமையிலே நிறுவும் வாய்ப்பும் உண்டாகும் உலகமே வியக்குமாறு தர்மத்தின் ஆட்சியை உருவாக்குவார்கள்.

நீதி காக்கும் வழிமுறைகளை தர்மத்தின் வழிமுறைகளை அவரவரும் ஏற்று நடக்க நாட்டினில் இயற்கை பேரிடரும் வராது பிரளயமும் கடந்து போய் எந்த பிரச்சனைகளும் இல்லாத அமைதியான சூழல் தேசமெங்கும் உருவாகிடும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–